**சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் - 2018**

---

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம**

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுளுக்கு அமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.2 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அந்த ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையமானது கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அந்த ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் துணைப் பிரிவின் பிரகாரம், நிலையத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

முழுமையாக எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை

வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவே அன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானவாறும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது நிலையத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறு அதன் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதும், அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்க" ர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- யாதேனுமொரு எழுத்து மூலமான சட்டம் அல்லது நிலையத்தின் பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்ட விசேட கட்டளை தொடர்பாக இணங்கியிருந்ததா என்பதும்,
- தமது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும்,
- வளங்கள் கால வரையறைகளின் உள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கு இணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க" ர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளல், பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்தல், முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்தல், ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் என்பன நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவனத்திற்குத் தேவையாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடந்த ஆண்டுகளுக்கான வருடாந்த பெறுமானத் தேய்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராத தெங்கு பெரஸரி கருத்திட்டத்தின் கட்டிடம், உயிரியல் வாயு அலகு, வீதி முறைமை மற்றும் வேலி பாதுகாப்பு ஆகிய சொத்துக்கள் தொடர்பில் அந்த ஆண்டுகளுடன் தொடர்புடையதாக 4.48 மில்லியின் ரூபா பெறுமானத் தேய்வு ஏற்பாடுகள் மீளாய்வு ஆண்டிற்குரி வருமானக்கூற்றில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. | கணப்பீட்டு ரீதியான பெறுமதி ஒன்று அல்லாத காரணத்தினால் இந்த ஆண்டின் இலாபத்துடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. | கடந்த ஆண்டுகளுடன் தொடர்புடைய சீராக்கம் ஒன்றாகக் கருதி கணக்கீட்டு சீராக்கங்களை மேற்கொள்வது பொருத்தமானதாகும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2018 டிசம்பர் 31 திகதியன்று ஏனைய கடன் கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட இனங்காணப்படாத வைப்புக்களில் பெறுமதியின் கூட்டுத்தொகை 45.42 மில்லியன் ரூபாவாக அமைந்திருந்தது. | இம்மீதிகள் எதிர்வரும் காலங்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இப்பெறுமதியை தாமதமின்றி சீராக்கம் செய்வதன் ஊடாக எதிர்வரும் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களின் நற்தன்மையினை உறுதி செய்து கொள்ள முடியும். |

### 1.5.3 இணக்கம் காணப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகளத | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 31 இல் ஏனைய கடன் கொடுத்தோரின் கீழ் சுய நிதி சார் நிதியத்தின் 1.89 மில்லியன் ரூபா இணக்கம் காணப்படாத மீதியொன்று உள்ளடங்கியிருந்தது. | இந்த மீதிகளை எதிர்வரும் காலங்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இப்பெறுமதியினை இனங் கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 வருமதி மற்றும் சென்மதி கணக்குகள்

### 1.6.1 சென்மதி கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **2018** டிசம்பர் **31** இல் கடன் கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டியுள்ள செலவினங்களாக குறிப்பிடப்பட்டிருந்த கூட்டுத்தொகை **3,928.36** மில்லியன் ரூபா கொடுக்க வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகையான **81.50** மில்லியன் ரூபா மீதியான தொகை 02 வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாதிருந்தது**.** | எதிர்வரும் காலங்களில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. | கொடுக்க வேண்டிய நிதிகளை சீராக்கம் செய்தல் அல்லது வருமானமாக கொள்வதன் மூலம் நிதிக் கூற்றுக்களை மிகவும் தெளிவான முறையில் சமர்ப்பிக்க முடியும். |

### 1.6.2 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிதிப் பிரமாணம் 237(ஆ) பிரகாரம், கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் குறித்த பொருட்கள் அனைத்தும் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் குறித்த கையிருப்புக்கள் பதிவேட்டில் அப்பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்த வேண்டியுள்ள போதிலும் அதற்கு இசைவுறாதவாறு மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் 125 சந்தர்ப்பங்களில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் 5104 மில்லியன் ரூபா பெறுமதியான தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்டவாறு 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டு வரையில் கொள்வனவுக்காக செலுத்தியிருந்த முற்பணம் 3.08 மில்லியன் ரூபா பெறுமதியான தொகை 2018 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது கூட தீர்க்கப்படாதிருந்தது. | பல்கலைக்கழகத்தின் திடீர் தேவைகளுக்காக இவ்வாறான முற்பணங்கள் வழங்கப்பட்டதாகவும் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான முற்பணங்களை செலுத்தும் போது நிதிப் பிரமாணம் 371(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 237(ஆ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பொருட்கள் கிடைத்ததன் பின்னர் கொடுப்பனவு செய்வதுடன் தொடர்புடைய நிபந்தனைகள், வழங்கல் செய்யப்படுவதாகவும் வழங்கல் தொடர்பான ஒப்பந்தங்களில் உள்ளடக்குவதன் மூலம் இதுபற்றி இடம்பெறுகின்ற பிரச்சினைகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். |
| (ஆ)பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் உள்;ர் பிரஜா உரிமையுடன் கூடிய மாணவர்களுக்கு செலுத்துகின்ற உணவு மற்றும் தங்குமிட வசதிகளுக்காக 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று கிடைக்க | அறவீடுகள் இடம்பெற்று வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | இந்த கிடைக்க வேண்டிய கடன் மீதிகளை சரியாக இனங் கண்டு அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் ஊடாக எதிர்வரும் ஆண்டுகளுக்கான நிதிக் |

| | | | |
|---|---|---|---|
| வேண்டிய 3.08 மில்லியன் ரூபா பெறுமதியான தொகை 03 வருட காலப் பகுதியாக முன் கொண்டு வரப்பட்டிருந்தது. | | கூற்றுக்களின் நற்தன்மையினை உறுதிப்படுத்த முடியும். | |

## 1.7 சட்டங்கள், ஒழுங்கு விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

| சட்டங்கள், ஒழுங்கு விதிகள், பிரமாணங்கள் என்பன பக்கம் கவனம் செலுத்துதல் | இணங்காமை ரூ. | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) **(i)** 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஸேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவகச் சட்டம்<br>(ii) 1988 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க திருத்தச் சட்டம்<br>(iii) 2007 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க ஸேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவக (திருத்த) சட்டம் | ஸேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவகத்தை தாபிப்பதற்கான சட்டத்தின் பிரகாரம் மற்றும் அதன் நோக்கு, செயற்பணி, குறிக்கோள் மற்றும் பணிகளின் பிரகாரம் நிறுவகத்தின் பட்டப் பாடநெறிகள் பாதுகாப்பு பணிகள் தொடர்பாக மாத்திரம் வரையறுக்கப்படுதல் வேண்டும். பல்கலைக்கழகத்தில் பிற்காலப் பகுதியில் இடம்பெற்ற மாற்றங்களுக்கு ஏற்ப பிற துறைகள் தொடர்பாகவும் 2011 ஆம் ஆண்டு முதல் பட்டங்கள் வழங்கப்படுகின்ற போதிலும் மேற்படி பாராளுமன்ற சட்டம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன. | பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படுகின்ற பட்டம் தொடர்பான சான்றிதழ்களின் சட்ட ரீதியான அங்கீகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்றவாறு குறித்த பாராளுமன்ற சட்டங்களில் திருத்தம் கொண்டு வருவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க ஸேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவக (திருத்த) சட்டம் | மேற்படி சட்டத்தின் பிரகாரம் மருத்துவ பீடத்திற்கு நிதி அடிப்படையில் உள்;ர் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு அல்லது பட்டங்களை வழங்குவதற்கு அனுமதி இல்லை. எவ்வாறாயினும் மருத்துவ பீடத்தினால் உள்;ர் பிரஜா உரிமையின் மீது இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த 64 மாணவர்கள் இரட்டை பிரஜா உரிமை உள்ள இலங்கை மாணவர்களாக அவதானிக்க முடிந்தது. | வெளிநாட்டு தகைமைகளின் மீது இணைத்துக் கொண்ட மாணவர்கள் என குறிப்பிடப்பட்டிருந்தது. | இவ்விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தலை பெற்றுக் கொண்டதன் பின்னர் மருத்துவ பீடத்திற்கு இணைத்துக் கொள்ளும் முறைமையினை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2 நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசாரா பெறுபேறு

பல்கலைக்கழக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்குரிய நிதி பெறுபேறுகள் 2,101.16 மில்லியன் ரூபா பற்றாக்குறை ஒன்றாக அமைந்ததுடன், அதை நேர் ஒத்ததாக கடந்த ஆண்டின் மிகையானது 555.55 மில்லியன் ரூபாவாக அமைந்ததனால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டின் நிதிப் பெறுபேறுகளில் 2,656.71 மில்லியன் ரூபா சீரழிவொன்று இடம்பெற்றுள்ளது. மீளாய்வு ஆண்டிலே பல்கலைக்கழகத்தின் போதனா மருத்துவமனையை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்டிருந்த கடன் தொகைக்கான வட்டி 3,734.72 மில்லிய்ன ரூபா பெறுமதியான தொகையினால் அதிகரித்தமை மேற்படி நிதி பெறுபேறுகளின் சீரழிவொன்று இடம்பெற்றுள்ளமை பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முன்னேற்ற பகுப்பாய்வு

2018 டிசம்பர் 31 உடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய மொத்த வருமான அதிகரிப்பிற்கு அடிப்படையாக அமைந்த காரணம் அரசாங்க மீண்டு வரும் பெறுகைகளாக அமைந்திருந்ததுடன் அத்தொகையானது 3,615.15 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. அதில் 2,294.03 மில்லியன் ரூபா பெறுமதியான தொகை பல்கலைக்கழக மருத்துவமனைக்காக கிடைக்கப் பெற்றிருந்தது. மீனாய்வு ஆண்டிலே வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக தாக்கம் செலுத்தியிருந்த மற்றைய காரணம் பாடநெறிக் கட்டணங்களின் வருமானமான 1,060.15 மில்லியன் ரூபா பெறுமதியான தொகை மற்றும் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் இணைப்புச் செய்யப்பட்ட தெற்காசிய மருத்துவ மற்றும் தொழில்நுட்ப நிறுவகத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற 258.69 மில்லியன் ரூபா பெறுமதியான வருமானமாகும்.

## 2.3 விகித பகுப்பாய்வு

### (அ) ஈடுபடுத்திய மூலதனத்தின் மீதான பெறுபேறு

2017 ஆம் ஆண்டிலே பேரளவு மூலதனத்தின் மீதான நன்மை விகிதம் 5.06 வீதமாக காணப்பட்டதுடன் அதனுடன் ஒப்பீட்டளவில் மீனாய்வு ஆண்டிலே அந்த விகிதமானது 21.07 ஆக சீரழிவிற்கு உட்பட்டிதிருந்தது.

### (ஆ) நடமாடும் விகிதம்

2018 ஆம் ஆண்டிலே நடைமுறைச் சொத்துக்களுக்கான நடைமுறைப் பொறுப்பு விகிதம் 2.08:1 வீதமாக காணப்பட்டது. தொடர்ந்தும் மீண்டு வரும் செலவினத்திற்கான அரசாங்க நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொள்வதன் ஊடாக பல்கலைக்கழகத்தின் தொழிற்படு மூலதனத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்ததாக அவதனாக்கக்கூடியதாக இருந்தது.

### (இ) கடன் பங்கு விகிதம்

2017 ஆம் ஆண்டிலே பேரளவு மூலதனத்திற்கான கடன் மூலதனத்தின் விகிதம் 1:2.84 ஆகக் காணப்பட்டதுடன் மீனாய்வு ஆண்டிலே அது 1:3.51 ஆக அமைந்திருந்தது. பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் 2013 ஆம் ஆண்டிலே போதனா வைத்தியசாலையினை நிர்மாணிப்பதற்காக பொதுத் திறைசேரியின் பிணைமுறி ஒன்றின் மீது வெளிநாட்டு தொகையில் 177.33 மில்லியன் அமெரிக்க டொலர் 3,165.12 மில்லியன் ரூபா உள்;ர் தொகையில் கடன் ஒன்று தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெறப்பட்டிருந்தது. மேற்படி கடன் தொகையினை மீளமைப்பு செய்தல் தொடர்பாக 2018 செப்டெம்பர் 17 ஆம் திகதி புதிய ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ஆரம்பக் கடன் தொகையில் 82.33 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தொகை 2018 செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் மீதித் தொகை 95 மில்லியன் அமெரிக்க டொலர் 11 தடவைகள் இலங்கை ரூபாவிற்கு பரிமாற்றம்

செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், கடன் தொகையின் மீது செலுத்த வேண்டியிருந்த 627.09 மில்லியன் ரூபா பெறுமதியான வட்டித் தொகை ஒன்று மற்றும் செலாவணி பரிமாற்றத்தின் போது வங்கியினால் பொறுப்பேற்க வேண்டியிருந்த 617.47 மில்லியன் ரூபா பெறுமதியான செலாவணி இழப்பீடு ஒன்று கடன் தொகைக்கான முதலீடாக சேர்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்படி கடன் பெறுமதிக்கான வட்டித் தொகை மற்றும் கடன் தவணை என்பன பொதுத் திறைசேரியினால் 2023 ஆம் ஆண்டு முதல் செலுத்துவதற்கும் உள்;ர் நிதியில் 3இ165.12 மில்லியன் ரூபா கடன் தொகையின் மீது செலுத்த வேண்டியிருந்த 90.83 மில்லியன் ரூபா வட்டித் தொகை 2023 ஆம் ஆண்டு முதல் 09 வருடங்களில் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் செலுத்த வேண்டும் என இணக்கம் தெரிவித்திருத்தல் கடன் பங்கு விகிதம் அதிகரிப்பதற்கு தாக்கம் செலுத்தியிருந்தது.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.2 தொழிற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புகள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)2017 மே 21 ஆம் திகதி நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு பல்கலைக்கத்தின் போதனா வைத்தியசாலைக்குரிய தொழிற்பாட்டு நடவடிக்கைகள் 2017 டிசம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2018 ஆகஸ்ட் 17 ஆம் திகதி போதனா வைத்தியசாலைக்கு தேவையாக பதவியணிக்கு அனுமதி வழங்கப்பட்டிருநததுடன் அதற்குத் தேவையான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது கூட தயாரித்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக போதனா வைத்தியசாலையின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளை | பணி நடைமுறையினை தயாரித்து முகாமைத்து சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பதற்கா பாதுகாப்பு அமைச்சிடம் முன்னளிக்கப்பட்டுள்ளது. | போதான வைத்தியசாலையின் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற இலக்கு மற்றும் சேவைகள் தொடர்பில் குறித்த தரப்பினர்களுக்கு விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த வேண்டியமை அத்தியவசியமானதாகும். அதன் பிரகாரம் இவ்விடயம் தொடர்பாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடுகளுக்கான நன்மைத் தொகை கிடைக்கக்கூடியவாறு பதவியணியை துரிதமாக ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் போதான வைத்தியசாலைக்கு |

| | | |
|---|---|---|
| உச்ச அளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்விடயம் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. | | உச்ச கொள்ளவில் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். |
| - போதான வைத்தியசாலைக்கு தேவையான மருத்துவ உபகரணங்களை ஒவ்வொரு கட்டத்திலும் பெற்றுக் கொண்டு பொருத்துவதற்காக 39,629,000 அமெரிக்க டொலர் பெறுமதியான செலவினம் ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பதவியணியின் வெற்றிடம் காரணமாக ஒவ்வொரு கட்டத்தின் கீழும் கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டிருந்த மருத்துவ உபகரணங்கள் உத்தேச தேவைகளை விடவும் குறைவாகவே கிடைக்கப் பெற்றிருந்தது. | மருத்துவமனையை நிர்மாணிப்பதில் தாமதம், மனித வளங்களின் குறைபாடு என்பன காரணமாக அதிகமான மருத்துவ உபகரணங்களை உத்தேச கட்டங்களின் கீழ் கொள்வனவு செய்யும் பணி தவிர்க்கப்பட்டிருந்தது. தேவைகளுக்கு ஏற்ப எதிர்வரும் காலங்களில் அவற்றினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மருத்துவமனையை முழுமையான தொழிற்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| - போதனா மருத்துவமனையினுள் செயற்படுத்த வேண்டிய சேவைகளை நிறைவேற்றுவதற்காக திடீர் விபத்து பிரிவு, சாதாரண வெளி நோயாளர் சேவை, மருத்துவ நிபுணர் சேவை, விசேட மருத்துவர் சேவை, அறுவை சிகிச்சை கூட சேவை, தீவிர சிகிச்சை சேவை உள்ளிட்ட 13 பிரிவுகளுக்கான பணிகள் வினைத்திறனான முறையில் செயற்படுத்தப்பட்டிருக்கவில் | தேவையான மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளும் போது ஏற்பட்ட பெறுகை தொழிற்பாடுகள் தற்போது முழுமையாக வரையறுக்கப்படாமை மற்றும் பதவியணியில் நிலவுகின்ற குறைபாடுகள் காரணமாக முழுமையாக மருத்துவமனை செயற்படுவதில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. | |

லை.

- மேலும் 2018 டிசம்பர் 31 இல் போதான மருத்துவமனையில் தாபிக்கப்பட்டிருந்த நோயாளர் படுக்கைகளின் எண்ணிக்கை 433 ஆக காணப்பட்டதுடன் 2018 மார்ச் மாதம் முதல் 2018 டிசம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியினுள் வதிவிட நோயாளர்கள் 2,012 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருந்து. அதன் பிரகாரம் சாதாரண கட்டில்களை பயன்படுத்தும் வீதமானது ஒரு படுக்கைக்கு 04 வதிவிட நோயாளர்கள் என்றவாறு காணப்பட்டனர். அவ்வாறே மீளாய்வு ஆண்டிலே அமுல்படுத்தப்டப்டிருந்த வெளி சிகிச்சைகள் 16 ஊடாக வசதியளிக்கக்கூடிய உச்ச நோயாளர்களின் எண்ணிக்கை 95,820 ஆக அமைந்திருந்த போதிலும் 25,735 நோயாளர்கள் மாத்திரமே சிகிச்சை பெற்றிருந்தனர்.

- போதனா மருத்துவமனையின் அனுமதிக்கப்பட்ட மருத்துவ பதவியணி மற்றும் நிருவாகப் பதவியணி முறையே 1,380 மற்றும் 516 ஆக அமைந்திருந்த போதிலும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி யாகும் போது மருத்துவமனைக்குரிய அனுமதிக்கப்பட்ட பதவியணியை ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறையினை அனுமதித்தன் பின்னர் பதவியணிக்கான தேவையின் மீது ஆட்சேர்ப்பு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மருத்துவமனை பதவியணியை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான தெளிவுபடுத்தல்களை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம்

| | | |
|---|---|---|
| ஒப்பந்த அடிப்படையின் மீது மற்றும் இணைப்புச் செய்யப்பட்ட இராணுவ வீரர்கள் உட்பட கடமையில் ஈடுபட்டிருந்த மருத்துவ பதவியணி மற்றும் நிருவாகப் பதவியணி அலுவலர்கள் 437 பேர் மற்றும் 284 பேர் என்ற அடிப்படையில் அமைந்திருந்தது. ஒப்பந்த அடிப்படையின் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த பதவியணியைச் சேர்ந்த 85 அலுவலர்கள் 2018 மற்றும் 2019 ஆண்டு காலப் பகுதிகளில் சேவையை விட்டு விலகிச் சென்றிருந்தனர். | | சமர்ப்பித்த பதவியணியை ஆட்சேர்ப்பு செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் தெற்கு மண்டபத்தின் அமுல்படுத்தப்பட்டு வந்த இரண்டு பீடங்களில் 04 பாடநெறிகள் ஊடாக மாணவர்களுக்கு மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 3,204 விரிவுரை மணித்தியாலங்கள் அமைந்திருந்த போதிலும் உண்மையாக 2,147.50 மணித்தியால விரிவுரைகள் மாத்திரமே இடம்பெற்றிருந்தது. | கற்கை மணித்தியாலங்களின் பின்னர் வகுப்பு, வகுப்பறை பயிற்சிகள் செயல்முறை கலந்துரையாடல்களை நடாத்துதல் என்பவற்றின் மூலம் பாடநெறியின் உள்ளடக்கங்கள் பற்றி கற்பித்தல் பணிகள் இடம்பெற்றிருந்தது. | திட்டமிட்டவாறு விரிவுரைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தெற்கு மண்டபத்திற்கு நிரந்தர நூலகக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிராமையால் 1152 சதுர அடி பரப்பளவினைக் கொண்ட நூலகம் ஒன்று தகரத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த பழைய கட்டிடம் ஒன்றில் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. 2018 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் 460 மாணவர்கள் தெற்கு மண்டபத்தினுள் கல்விப் பணிகளில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் நூலகத்தில் 1,800 புத்தகங்க்ள மாத்திரமே காணப்படுகின்றது. | நூலகத்திற்காக பிரதான கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு 2020 ஆம் ஆண்டிலே நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளபோதிலும் இதுவரையில் கொள்வனவு செய்யாத புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வரப்படுகின்றது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள புத்தகங்களை முன்னுரிமை பட்டியல்களை பேணி வருவதற்கும், போதிய நூலக கட்டிடத்திற்கான வசதிகளைப் பேணி வருவதற்கும் நடவடிக்கை எடுப்பதன் ஊடாக பட்டப் பாடநெறிகளின் நற்தன்மையினை பேணி வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 1393 மாணவர்கள் தொகை காணப்பட்டதுடன் அதில் பாதுகாப்பு துறை சார்ந்த 382 கெடட் அதிகாரிகளும், மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் தெற்காசிய மருத்துவ மற்றும் தொழில்நுட்ப நிறுவகத்திலிருந்து இணைப்புச் செய்யப்பட்ட 819 பேரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மருத்துவ பீடத்தின் 06 குழுக்களைச் சேர்ந்த வெளிநாட்டு தகைமைகளைக் கொண்ட 192 மாணவர்கள் கற்கைப் பணிகளில் ஈடுபட்டுள்ள போதிலும் வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் | ருவண்டா மாணவர்களின் வருகை குறைவடைந்தமை மற்றும் பயிற்சிக்கால மருத்துவ பயிற்சி வழங்குவதற்காக இதுவரையில் இலங்கை மருத்துவ சபையினால் உரிய தீர்மானம் ஒன்று வழங்கப்படாமை என்பன வெளிநாட்டு தகைமைகளின் மீது இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைவதற்கு காரணமாக அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | வெளிநாட்டு பிரஜா உரிமையுடைய மாணவர்களை கவருவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

முறைமையில் மோசமடைந்து காணப்பட்டதுடன் மீளாய்வு ஆண்டிலே 25 மாணவர்கள் மாத்திரமே இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

## 3.3 முகாமைத்துவத்தின் செயற்திறன் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் போதானா வைத்தியசாலைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மின்சார செலவினம் 200.95 மில்லியன் ரூபாவாகும். முழு மருத்துவமனை முறைமைக்காகவும் பன்முகப்படுத்தப்பட்ட வளி சீராக்கி சேவை ஒன்று செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் மீளாய்வு ஆண்டிலே மருத்துவமனையினுள் செயற்படாத 24 பிரிவுகள் காணப்படுவதனால் உயர் மின்சார செலவு ஒன்றினை செலவிட வேண்டியுள்ளது. | மின்சார செலவைக் குறைத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் செயற்படாத பிரிவுகளின் வளி சீராக்கல் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. | நிறுவகத்தின் உள்ளக செலவின கட்டுப்பாட்டுப் பணிகளை வினைத்திறனாக மேற்கொள்வதன் ஊடாக நிதி நிலையினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் அத்தியவசியமானதாகும். |
| (ஆ) போதானா வைத்தியசாலைக்கு மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் தொலைபேசி மற்றும் இணைய வசதிகளுக்காக 8.14 மில்லியன் ரூபா பெறுமதியான உயர் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இணைய வசதிகளை வழங்குவதற்காக பெறப்பட்டிருந்த தரவு பெகேஜ் இன் கீழ் மாதாந்தம் 259 | இணைய வசதிகள் குத்தகை தரவு வழியின் ஊடாக பெறப்பட்டுள்ளதாகவும் தற்போதுள்ள தரவுப் பெகேஜ் குறைந்த கொள்ளவிற்கு கொண்டுவர கலந்துரையாடப்பட்டுள்ளது. | |

டெரா பைட் இற்காக 0.66 மில்லியன் ரூபா பெறுமதியான கட்டணம் ஒன்று செலுத்தப்பட்டிருந்த போதும் 2018 டிசம்பர் 31 உடன் முடிவுற்ற 06 மாத காலப் பகுதியினுள் சாதாரண மாதாந்த தரவுப் பயன்பாடானது 06 டெராபைட் மாத்திரமாக இருந்தது.

(இ) 2018 டிசம்பர் 31 ஆம் திகிதியன்று பல்கலைக்கழகத்தின் ஒரு உள்ளக விரிவுரையாளர் குழாமைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| பீடத்தின் பெயர் | ஒரு விரிவுரையாளரின் கீழ் உள்ள மாணவர் தொகை |
|---|---|
| மருத்துவம் | 24 |
| சம சுகாதாரம் | 12 |
| சட்டம் | 57 |
| பொறியியல் | 24 |

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலப் பிரமாணங்களின் பிரகாரம் மருத்துவ பீடத்திற்கு ஒரு விரிவுரையாளரினால் 07 மாணவர்களும், சம சுகாதார மாணவர்கள் 10 பேரும் ஆகக் கூடிய அளவில் கண்காணிக்கக்கூடியதாக உள்ளதுடன் சட்டம் மற்றும்

தற்போதைய மாணவர் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டிய ஆசிரியர் மாணவர் விகிதத்திற்கு பொருந்தக்கூடியவாறு பதவியணியின் தேவைக்கு பாதுகாப்பு அமைச்சின் சிபாரிசுடன் கூடிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மூலப் பிரமாணங்களின் பிரகாரம் ஆசிரியர் மாணவர் விகிதத்தை பேணி வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் ஊடாக பட்டப் படிப்பு பாடநெறிகளின் நற்தன்மையினை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பொறியியல் பீடங்களின் ஒரு விரிவுரையாளரினால் முறையே 18 மாணவர்கள் 10 மாணவர்கள் மாத்திரம் ஆகக் கூடிய அளவில் கண்காணிக்கக் கூடியதாக உள்ளது. | | |

## 3.4 கருத்திட்ட அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்துடன் இணைந்த தெற்கு வளாகத்தின் நிர்மாணப் பணிகள் 2018 ஆம் ஆண்டின் இறுதியாகும் போது பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் போதிய நிதி ஏற்பாடுகள் இன்மையினால் நிர்மாணப் பணிகள் தாமதமாக இடம்பெற்று வருவதாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது. | நிர்மாணப் பணிகளுக்கான நிதி ஏற்பாடுகள் கிடைப்பதில் காணப்பட்ட மந்தமான நிலை காரணமாக முன்னுரிமை அடிப்படையில் சந்தர்ப்பத்திற்கு தேவையானவாறு மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதன் ஊடாக செலவினத்தைக் குறைத்துக் கொள்வதற்கும் கற்கைப் பணிகளை முறையான வசதிகளின் கீழ் மேற்கொள்வதற்கும் முயற்சி எடுத்தல் வேண்டும். |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கெடெட் அலுவலர்களின் விடுதியின் உணவுப் பொருட்களின் தேவைக்காக 2018 ஆம் ஆண்டிலே 53.54 மில்லியன் ரூபா பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக வழங்குநர்களை தேர்ந்தெடுப்பதற்கு கேள்வி அழைப்புக்கள் கோரப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்வதற்கு சபை ஒன்றை நியமித்துக் கொள்வதற்காக எழுத்து மூல கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் அறவிட வேண்டியிருந்த உணவுத் தொகையானது தற்போது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முறையாக விலை மனுக்களைக் கோரி உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் அறவிட வேண்டியுள்ள |

| | | பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
|---|---|---|

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரச தொழில் முயற்சிகள் பற்றிய குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்ததன் பிரகாரம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக உள்ள முப்படைகளின் மூலம் இணைப்பு செய்யப்பட்ட 1327 அலுவலர்களைக் கொண்ட பதவியணிக்காக முறையான அனுமதியொன்று 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பெறப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை. | பல்கலைக்கழகங்களுக்கு தயாரிக்கப்பட்ட புதிய பதவி ஆவணத்தை அனுமதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அரச தொழில் முயற்சிகள் பற்றிய குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |
| (ஆ) பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பிரதி உப வேந்தர் (கற்கை), நிதி பொது முகாமையாளர், பதிவாளர் மற்றும் நூலகர் ஆகிய பதவிகள் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது இரண்டு வருடங்களுக்கு மேலாக வெற்றிடமாகக் காணப்பட்டன. அப்பதவிகளுக்காக பதில் கடமை புரியும் அலுலவர்கள் 04 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | ஆட்சேர்ப்பு செய்வதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன. | பல்கலைக்கழக பணிகளுக்காக தாமதம் இன்றி அப்பதவிகளுக்கு நிரந்தர அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான தேவை வலியுறுத்தப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| (இ) பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் தெற்கு வளாகத்தில் 741 பதவி வெற்றிடங்கள் நிலவியதுடன் பிற பதவிகள் 39 மேலதிகமாக இருந்தது. 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று தெற்கு வளாகத்தினுள் பேராசிரியர் பதவிகள் 07, சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகள் 25, விரிவுரையாளர் பதவிகள் 07 என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன. | ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன. | |

## 4. கணக்கீட்டு பணிகள் மற்றும் நல்லாட்சி

### 4.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜூன் 02 ஆம் திகதிய இலக்கம் பிஇடீ∴12 உடைய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 இன் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வாரள் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக 2019 ஏப்ரல் 18 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்துடன் அந்நிதிக் கூற்றுக்களுக்கு முகாமைத்துவ சபையின் அனுமதியானது 2019 மே 07 ஆம் திகதியன்றே கிடைக்கப் பெற்றிருந்தது. | இதன் பின்னர் உரிய தினத்தன்று நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

## 4.2 வருடாந்த தொழிற்பாட்டு திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் போதானா வைத்தியசாலை பற்றி முன்வைக்கப்பட்டிருந்த சாத்தியவள அறிக்கையின் பிரகாரம் மருத்துவமனை தொழிற்பாட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை சேவைகள் வழங்கப்படுவதன் ஊடாக வருமானம் ஈட்டுவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது மருத்துவமனைக்கான தொழில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் வருமானம் ஈட்டுவதற்கான திட்டங்களை தயாரித்து 2019 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்படும். | வருமானம் ஈட்டல் தொடர்பான உரிய தொழில் முயற்சித் திட்டங்களை தயாரிப்பதன் ஊடாக தாபனப் பணிகளை சிறந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.3 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த கணக்காய்வு அலுவலர்களின் எண்ணிக்கை 04 ஆகக் காணப்பட்டதுடன் அத்தொகையானது பிற்காலத்தில் விஸ்தரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியதாக இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | மேலதிகப் பதவியணி ஒன்றைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | போதிய கணக்காய்வு பதவியணி ஒன்றை இணைப்புச் செய்வதன் மூலம் உள்ளக நிருவாகக் கட்டமைப்பை முறைப்படுத்தல் வேண்டும். |

## .4 வரவு செலவுத் திட்ட கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் 07 செலவின அலகுகளின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உண்மை செலவினம் என்பவற்றுக்கிடையே 36 சதவீதம் முதல் 4264 வரையிலான இடைவெளியொன்றினைக் கொண்ட மாறுதலொன்று காணப்பட்டதனால் வரவு செலவுத்திட்ட ஆவணத்தை கட்டுப்பாட்டு காரணி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வித்தியாசத்தை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை இயன்றளவு சரியாக திட்டமிடல் வேண்டும். |

## 4.5 வலுவாதார அபிவிருத்திக் குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் வலுவாதார அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2017 ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதிய இலக்கம் என்பீ/எஸ்பீ/எஸ்டீஜி/17 கடிதம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் 2017 ஜுலை 31 ஆம் திகதிய பிடீ/சிபிபீ/4/1/2 - 2018 உடைய சுற்றறிக்கையின் பிரகாரம் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் தமது பாடத்திட்டத்திற்கு ஏற்ப அடைந்து கொள்ள வேண்டிய வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைய | எதிரவரும் காலங்கிளல் அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | குறிக்கோள் மற்றும் இலக்கினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வேண்டிய இடங்கள் என்பவற்றினை அவ்வாறு அடைந்து கொண்ட இலக்கினை அளவிடுவதற்கான குறிகாட்டி ஒன்றினை இனங்காண்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வலுவாதார அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டிருக்காமை காரணமாக தேவையான நிதி ஏற்பாடுகள், மனிதவளம் மற்றும் பௌதீக வளம் என்பன தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு முடியாது போயுள்ளமை அவதானிக்கப்பட்டது.